# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கான மாதாந்திர குறைதீர் கூட்டம் அரியலூர் மாவட்டக் கருவூல அலுவலர் தலைமையில் **30.09.2019** அன்று காலை 10.30 மணிக்கு நடைபெற உள்ளது.

ஓய்வூதியர்கள் அரியலூர் மாவட்டக் கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்களில் நிலுவையில் உள்ள குடும்ப ஓய்வூதியம், வாழ்நாள் நிலுவை, கூடுதல் ஓய்வூதியம், திருந்திய ஓய்வூதியம் போன்ற தங்களது குறைகளை தெளிவாக குறிப்பிட்டு **"மாதாந்திர ஓய்வூதியர்கள் குறைதீர்க்கும் கூட்ட விண்ணப்பம்"** என தலைப்பிட்டு மாவட்டக் கருவூல அலுவலர், அரியலூர் என்ற முகவரிக்கு **23.09.2019க்குள்** அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அரியலூர் மாவட்ட கருவூல அலுவலரின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட அனைத்து விண்ணப்பங்கள் மீதும் உடனடி நடவடிக்கை எடுத்து உரிய ஆணைகள் மற்றும் நிலுவைத் தொகை வழங்கப்படும். மேலும் கூட்டத்தின்போது ஓய்வூதிய விவரங்களை புத்தகத்தில் பதிவு செய்தல், நாமினேஷன் தாக்கல் செய்தல், வருமானவரி படிவம் (Form 16) வழங்குதல், புதிய மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் பெறுதல, ஓய்வூதியர் அடையாள அட்டை பெறுதல் போன்ற சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட கருவூல அலுவலர் **திரு.எஸ்.நடராஜன்** அவர்கள் தெரிவித்துள்ளார்